# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 178/ந/2024

நாள். 14.03.2025

திரு. ஆ. முருகன்,
அரியலூர், அரியலூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
அரியலூர் நகராட்சி, அரியலூர்
அரியலூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

அரியலூர் மாவட்டம், எண்ணெய்க்காரத் தெரு, கதவு எண். 50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆ. முருகன் என்பவரின் 23.07.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.07.2024 அன்று பெறப்பட்டு, 178/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

அரியலூர் மாவட்டம், எண்ணெய்க்காரத் தெரு, கதவு எண். 50 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஆ. முருகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"நான் கடந்த 24 ஆண்டுகளாக பத்திரிகை நிருபராக பணிபுரிந்து வருகிறேன். நான் அரியலூர் நகராட்சிக்கு முறையாக வரி செலுத்தி வருகிறேன்.

1) கடந்த 2017–2018 ல் அரியலூர் நகராட்சி எல்லைக்குள் உள்ள பள்ளி ஏரி ரூ.67.00 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டதாகவும், அதற்காக 2020–ல் பில் திரு. நா. பிரேம்குமார் என்பவருக்கு வழங்கப்பட்டதாகவும் நகராட்சி ஆவணங்கள் உறுதி செய்கின்றன. ஆனால் அதே பள்ளி ஏரி மீண்டும் 2 ஆண்டுக்குள் டெண்டர் ரூ.77.00 இலட்சத்திற்கு விடப்பட்டது. பணிகளும் நிறைவு பெற்றதாக பில் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது நகராட்சி ஆவணங்கள் அடிப்படையில் தெரியவருகிறது. 2 ஆண்டுகள் இடைவெளியில் எதற்காக மீண்டும் அதே ஏரியில் பணி செய்ய டெண்டர்?அப்படி என்றால் இதற்கு முன் ரூ. 67.00 இலட்சம் செலவில் அந்த பள்ளி ஏரியில் என்ன பணிகள் நடைபெற்றது? மீண்டும் எந்த பணிகளுக்கு ரூ. 77.00 இலட்சம் மதிப்புள்ள டெண்டர் விடப்பட்டு பணிகள் நடைபெற்றது எதற்காக? இது

குறித்து ஏற்கனவே ரூ. 67.00 இலட்சம் மதிப்பில் செய்யப்பட்ட பணிகளின் விபரங்கள், எம்.புக், காசோலை விபரங்கள் ஆகியவை குறித்தும், 2022–ல் மீண்டும் ரூ. 77.00 இலட்சம் மதிப்புள்ள டெண்டர் விவரங்கள், எம்.புக், காசோலை விபரங்கள் குறித்தும் உரிய ஆவணங்களை அரியலூர் நகராட்சி நிர்வாகத்திடம் பெற்று புகைப்பட ஆதாரங்களுடன் உரிய விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2) அதேபோல் அரியலூர் நகராட்சி எல்லைக்குள் உள்ள எஸ்ஆர் நகர் பூங்காக்கள் முறையே ரூ.28.00 இலட்சம் மற்றும் ரூ.48.00 இலட்சத்தில் கட்டப்பட்டு ஒப்பந்ததாரர்களுக்கு பில் தொகை வழங்கப்பட்டதாக தெரியவருகிறது. இந்த இரண்டு பூங்காக்களில் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. இதுவரை ஒரு செடி, மரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகள் வைக்கப்படவில்லை. இவைகள் குறித்து உரிய ஒர்க் ஆர்டர், எம்.புக் மற்றும் காசோலை, புகைப்படங்கள் ஆகிய விபரங்களை அரியலூர் நகராட்சி நிர்வாகத்திடம் பெற்று நான் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றை வைத்து உரிய விசாரணை செய்து மோசடி செய்துள்ள அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க பிராத்திக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 04.10.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி ஆணையர், தனது 28.10.2024 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"அரசாணை எண்.32, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.04.2017–ன் படி, Kfw திட்டத்தின் கீழ் அய்யப்பன் ஏரி ரூ.65.00 இலட்சம், வண்ணான்குட்டை ஏரி ரூ.24.00 இலட்சம் மற்றும் பள்ளி ஏரி ரூ.67.00 இலட்சத்திலும் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு கடித ந.க.எண்.31441/2017/WS 3, நாள் 21.04.2017–ன்படி TNUDF அரசு மான்யமாக ரூ.109.20 இலட்சமும், நகராட்சி பங்களிப்பாக ரூ.15.60 இலட்சமும் மற்றும் கடன் தொகையாக ரூ.31.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.35683/2017/DOIL, நாள் 09.07.2017–ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு 20.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவது தொடர்பான அறிவிப்பு மக்கள் குரல் தினசரி நாளிதழில் 13.11.2017 அன்றும், இன்டியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழில் 13.11.2017 அன்றும் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி, ஒளிவுமறைவற்ற ஒப்பந்தபுள்ளி அறிவிப்பின்படி 20.12.2017 அன்று திரு. பிரேம்குமார், வெங்கடரமணபுரம், அரியலூர் மற்றும் திரு. முருகன், அரியலூர் ஆகிய இரு ஒப்பந்ததாரர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. ந. பிரேம்குமார், என்பவருக்கு 04.01.2018 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி பள்ளி ஏரி நீர்நிலை மேம்படுத்தும் பணியானது திட்டமதிப்பீட்டின் படி உரிய நடைமுறைகளை பின்பற்றி அரசு பொறியியல் கல்லூரியில் உரிய வடிவமைப்பு பெற்று தடுப்பு சுவர் 125 மீ நீளமும், நீர் வரத்து மதகு1 எண்ணிக்கை, நீர் வடிகால் மதகு 1 எண்ணிக்கை, படித்துறை 6 மீ நீளத்திலும், மின் விளக்கு 6 எண்ணிக்கை, கரையோரங்களில் நிழல் தரும் மரங்கள் 50 எண்ணிக்கை மற்றும் குப்பைத்தொட்டிகள் 5 எண்ணிக்கைகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி ஏரி நீர்நிலை மேம்படுத்தும் பணிகள் நடைபெறும் போது அரியலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் , மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் அவர்களால் அவ்வப்போது நேரடி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் மற்றும் TNUIFSL சென்னை நிறுவனத்தால் பணிகள் நேராய்வு செய்யப்பட்ட பிறகு அவர்களின் அறிவுரையின்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அளவு புத்தகத்திலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களிடம் மேலொப்பம் பெற்ற பிறகுதான் பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பணிமுடிவறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.06.2022–ன்படி ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் அரியலூர் நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.01 சர்வே எண்.290/4 பள்ளி ஏரி புணரமைப்பு பணிகளான Stone pitching (2261$M^2$), Foot path (504.80M), Fencing (705 M) and Lighting arrangements (4 Nos) மேற்கொள்ள 29.07.2022 அன்று இணையவழி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய Thiru R.Sudhakar,Perambalur என்பவருக்கு பணி செய்ய உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி ஏரி நீர்நிலை புணரமைப்பு பணிகள் நடைபெறும் போது அரியலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் ஆகியோரால் அவ்வப்போது நேரடி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் அளவு புத்தகத்திலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களிடம் மேலொப்பம் பெற்ற பிறகுதான் பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பணிமுடிவறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.88, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.06.2022ல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–23ன் கீழ் ரூ.59.00 இலட்சம் மதிப்பட்டில் வார்டு எண்.10 சர்வே எண்.586 SR நகரில் புதிய பூங்கா அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி 29.07.2022 இணையவழி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய D. கேசவன், திருச்சி என்பவருக்கு 12.08.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.10.22022ல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.13, சர்வே எண்.586/2 SR நகரில் புதிய பூங்கா அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி 25.11.2022 இணையவழி

ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய D.கேசவன், திருச்சி என்பவருக்கு 02.12.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் சர்வே எண்.586 மற்றும் 586/2 SR நகரில் புதிய பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவரும் போது நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் அவர்களால் அவ்வப்போது நேரடி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் அளவு புத்தகத்திலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களிடம் மேலொப்பம் பெற்ற பிறகுதான் பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பணிமுடிவறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. ஆ. முருகன் என்பவரும், மற்றும் எதிர்மனுதாரான அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சி ஆணையரும் 04.02.2025 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவத்தின் 25.01.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. ஆ. முருகன் என்பவர் 04.02.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:

"நான் புகாரில் கூறிய அரியலூர் நகராட்சியின் பள்ளி ஏரி குறித்து ஒப்பந்தபணிகள் ரூ.67.00 இலட்சம் மற்றும் ரூ.77.00 இலட்சம் ஆகும். இதில் மோசடி நடந்துள்ளது. 2 ஆண்டுகளில் 1 ஏரிக்கு எப்படி நிதி ஒதுக்கப்பட்டது என தெரியவில்லை. ரூ.67.00 இலட்சத்தில் வேலை செய்த வேலையில் தவறு இருப்பதால்தான் 2 ஆண்டுகள் கழித்து அதே ஏரிக்கு ரூ.77.00 இலட்சம் நிதி ஒதுக்கி வேலை செய்துள்ளனர். அதேபோல் S.R.நகரில் உள்ள இரண்டு பூங்காக்கள் தண்ணீர் வசதியில்லாமல், மின்சார இணைப்பு இல்லாமல் வேலை முடிந்ததாக கூறி சுமார் ரூ.70.00 இலட்சம் ஒப்பந்தப்பட்டியல் தொகை கொடுக்கப்பட்டது. 03.02.2025 மாலை அந்த பூங்காக்கள் குறித்த புகைப்படங்கள் மற்றும் நான் கொடுத்த CD தான் ஆதாரம். அவைகளை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன். தக்க நடவடிக்கை எடுக்கும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான அரியலூர் நகராட்சி ஆணையர் (பொ) திரு. அசோக் குமார் என்பவரும், அரியலூர் நகராட்சியில் நகராட்சி பொறியாளராகப் பணிபுரியும் திரு. விஜய் கார்த்தி என்பவரும் 04.02.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளனர்:

"அரியலூர் நகராட்சி 2016–2017ம் ஆண்டு KFW திட்டத்தில் பள்ளி ஏரி புனரமைப்பு செய்ய ரூ.67.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இந்நிதியில் ஏரி முழுவதும் ஆழப்படுத்தப்பட்டு, தூர்வாரி சரி செய்யப்பட்டது. மேலும் ஏரியின் சாலையோர பகுதியில் CC பிளாக் அமைத்து பணி நிறைவு செய்து, பணி முடிவு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஏரிக்கு 2022–2023–ஆம் ஆண்டு KNMT திட்டத்தில் மேம்படுத்த ரூ.77.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியில் ஏரியின் மீதமுள்ள மூன்று பகுதிகளிலும் CC பிளாக், நடைபாதை, தெருவில் விளக்குகள் பொருத்துதல், ஏரி தண்ணீர்

Inlet and outlet அமைத்தல் மற்றும் ஏரி சுற்றி பதுகாப்பு கம்பி வேலி அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது.

2022–23 ஆம் ஆண்டு KNMT திட்டத்தில் SR நகர் பூங்கா ச.எண்.586 இடத்தில் ரூ.59.00 இலட்சத்தில் பூங்கா சுற்றி பாதுகாப்பு சுவர், பாதுகாவலர் அறை, சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், போர்வெல் அமைத்து தண்ணீர் வசதி செய்தல், மின் விளக்குகள் மற்றும் பெயர்பலகை, மின் இணைப்பு பெறப்பட்டு, பணி நிறைவு செய்யப்பட்டது.

2022–2023ம் ஆண்டு KNMT திட்டத்தில் S.R. நகர் பூங்கா ச.எண்.586/2 இடத்தில் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா சுற்றி பாதுகாப்பு சுவர், பாதுகாவலர் அறை, சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், போர்வெல் உடன் தண்ணீர் வசதி, மின் விளக்குகள் மற்றும் பெயர்பலகை, மின் இணைப்பு பெறப்பட்டு பணி நிறைவு செய்யப்பட்டது.

மேற்கண்ட பூங்காக்களுக்கு வரும் மாதங்களில் நகர் மன்றத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்து பூங்கா பராமரிக்கப்படும் என பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், எதிர்மனுதாரரான அரியலூர் நகராட்சி ஆணையரின் (கூபொ) அறிக்கை, அவரது வாக்குமூலம், அரியலூர் நகராட்சி பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. ஆ. முருகன் என்பவரின் மனுவில் (1) கடந்த 2017–2018 ல் பள்ளி ஏரி ரூ.67.00 இலட்சத்தில் புனரமைக்கப்பட்டதாகவும், அதே பள்ளி ஏரி மீண்டும் 2 ஆண்டுகள் இடைவெளியில் மீண்டும் ரூ. 77.00 இலட்சம் மதிப்புள்ள பணிகள் நடைபெற்றது எதற்காக? அவற்றிற்கான செலவு விவரங்கள் குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

அரசாணை எண்.32, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.04.2017–ன் படி, Kfw திட்டத்தின் கீழ் பள்ளி ஏரி ரூ.67.00 இலட்சத்தில் தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் உத்திரவு கடித ந.க.எண்.31441/2017/WS 3, நாள் 21.04.2017–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.35683/2017/DOIL, நாள் 09.07.2017–ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு 20.12.2017 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பான அறிவிப்பு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் 13.11.2017 அன்று வெளியிடப்பட்டு, பள்ளி ஏரி நீர்நிலையின் தடுப்பு சுவர், நீர் வரத்து மதகு, நீர் வடிகால் மதகு, படித்துறை, மின் விளக்குகள், கரையோரங்களில் நிழல் தரும் மரங்கள் மற்றும் குப்பைத்தொட்டிகள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.06.2022–ன்படி ரூ.77.00 இலட்சம் மதிப்பீட்டில் Stone pitching (2261$M^2$), Foot path (504.80M), Fencing (705 M) and Lighting arrangements (4 Nos) பள்ளி ஏரி

புணரமைப்பு பணிகளை மேற்கொள்ள 29.07.2022 அன்று இணையவழி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு பணிகள் முடிக்கப்படடுள்ளது.

மேற்படி பணிகள் நடைபெறும் போது அரியலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் ஆகியோரால் அவ்வப்போது நேரடி ஆய்வு செய்யப்பட்டு, அளவு புத்தகத்திலும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களிடம் மேலொப்பம் பெற்று பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பணிமுடிவறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விவரம் அரியலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது.

(2) எஸ்ஆர் நகர் பூங்காக்கள் முறையே ரூ.28.00 இலட்சம் மற்றும் ரூ.48.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டு ஒப்பந்ததாரர்களுக்கு பில் தொகை வழங்கப்பட்டதாக தெரியவருகிறது. இவ்விரண்டு பூங்காக்களில் சுற்றுச்சுவர் மட்டுமே கட்டப்பட்டுள்ளது. இதுவரை செடி, மரக்கன்றுகள் மற்றும் பூச்செடிகள் வைக்கப்படவில்லை என மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.88, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 17.06.2022ல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2022–23ன் கீழ் ரூ.59.00 இலட்சம் மதிப்பட்டில் வார்டு எண்.10 சர்வே எண்.586 SR நகரில் புதிய பூங்கா அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி 29.07.2022 இணையவழி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 21.10.22022ல் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–23ன் கீழ் ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.13, சர்வே எண்.586/2 SR நகரில் புதிய பூங்கா அமைக்க நிர்வாக அனுமதி பெறப்பட்டதின்படி உரிய நடைமுறைகளை பின்பற்றி 25.11.2022 இணையவழி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் சர்வே எண்.586 மற்றும் 586/2 SR நகரில் புதிய பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது நகராட்சி நிர்வாக மண்டல பொறியாளர், தஞ்சாவூர் அவர்களால் அவ்வப்போது நேரடி ஆய்வு செய்யப்பட்டு, அளவு புத்தகத்தில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் மேலொப்பம் பெற்ற பின் பட்டியல் தொகைகள் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு பணிமுடிவறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் அரியலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரியவருகிறது.

இந்நேர்வில், அரசாணைகளின்படி வெவ்வேறு பணிகளுக்கு வெவ்வேறு திட்டங்களின் கீழ் 2016–17 மற்றும் 2022–23 ஆகிய ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அப்பணிகள் முறையாக டெண்டர் விடப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ள விவரம் அரியலூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களின் வாயிலாக அறியப்படுகின்றது.

எனினும், அரியலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட S.R.நகரில் அமைந்துள்ள பூங்காக்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என நகராட்சி ஆணையர் தனது

அறிக்கையில் தெரிவித்துள்ள நிலையில், மனுதார் அளித்துள்ள புகைப்படங்களை ஆராய்ந்ததில், இரு பூங்காக்களும் பராமரிப்பற்று, புதர்கள் நிறைந்து இருப்பதாக தோற்றமளிக்கிறது.

எனவே, மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள பள்ளி ஏரியில் இருவேறு திட்டங்களின் கீழ் இரு வேறு ஆண்டுகளில் நடைபெற்ற பணிகள் மற்றும் S.R.நகரில் இரு பூங்காக்கள் அமைப்பதில் நடைபெற்ற பணிகளில் அரசுக்கு நிதியிழப்பு ஏதுமின்றி முறையாக நடைபெற்றுள்ளதா என்பது குறித்து கள ஆய்வு மேற்கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்ற நடுவதிற்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. ஆ. முருகன்,
கதவு எண். 50, எண்ணெய்க்காரத் தெரு,
அரியலூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
அரியலூர் நகராட்சி,
அரியலூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,
சென்னை – 600 028.

4)நகராட்சி நிர்வாக மண்டல இணை இயக்குநர்,
நகராட்சி நிர்வாகம்,
தஞ்சாவூர்.

5)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்.